DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No.108 /2023**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | சுலோச்சனா | Husband Name – | ராமசுப்பிரமணியன் |
| Age | 76 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2026.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. தாவா சொத்து எனக்கு எனது கணவர் வழியில் கிடைக்கப்பெற்றதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மாமனாரின் தந்தை பெயர் வெள்ளையப்ப செட்டியார் என்றால் சரிதான். வெள்ளையப்ப செட்டியாருக்கு தேவசுப்பையா மற்றும் ஜெயகோபாலன் என்ற இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி ஜெயகோபாலனுக்கு ராமசுப்பிரமணியமும் சரசாவும் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து ஜெயகோபாலனும் தேவசுப்பையாவும் 1968 ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் A schedule சொத்து ஜெயகோபாலனுக்கும், B schedule சொத்து தேவசுப்பையாவுக்கும் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான்.

2. எனது கணவரின் உடன்பிறந்த சகோதரி சரசாவின் கணவர் பெயர் சௌடையன் என்றால் சரிதான். சரசாவிற்கும் சௌடையனுக்கும் எத்தனை மக்கள் என்றால் ஒரே ஒரு மகள் மட்டும். எனது கணவர் ராமசுப்பிரமணியமும் அவரது சகோதரி சரசாவும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை பொறுத்து எதுவும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை. சரசாவோ அல்லது அவரது வாரிசுகளோ வழக்குரை சொத்தை பொறுத்து அவர்களுக்கு உரிமை எதுவும் வேண்டாம் என விடுதலை பத்திரம் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் எழுதுக்கொடுக்கவில்லை.

3. எனது கணவர் ராமசுப்பிரமணியத்திற்கு வழக்குரை சொத்தில் என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை சராசாவிற்கும் உள்ளது என்றால் சரிதான், ஆனால் சராசாவின் திருமணத்தின்போது அவருக்கு நகை கொடுத்ததால் அவருக்கு சொத்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கின்றேன். சரசாவோ அல்லது அவரது

வாரிசுகளோ இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு அனுமதியோ அதிகாரமோ கொடுத்துள்ளார்களா என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. வழக்குரை சொத்தில் சரசாவிற்கும் சரிபாதி உரிமை உள்ளது என்றும், அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தில் எனக்கு முழு உரிமை இல்லாததால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 06.05.2023 அன்று எனது வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதி ஆண்டவருக்கும், டாக்டர் ரவீந்திரனுக்கும் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புதான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். **மேற்படி 1ம் பிரதிவாதி ஆண்டவருக்கும், டாக்டர் ரவீந்திரனுக்கும் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது**. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பில் டாக்டர் ரவீந்திரன் ஆண்டவருக்கு எழுதிக்கொடுத்த 31.01.1996 ம்தேதிய கிரைய பத்திரத்தில் வடக்கு பக்க சுவர் பொதுச்சுவர் என்று சொல்லப்பட்டுள்ளதை ரத்து செய்து தர வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி ஆண்டவரும் அவரது வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது 17.05.2023 ம் தேதி 1ம் பிரதிவாதி ஆண்டவர் அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். **1ம் பிரதிவாதி 17.05.2023 ம் தேதி அனுப்பிய பதில் அறிவிப்பும், அஞ்சலக ரசீதும், ஒப்புதல் அட்டையும் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டது**.

5. ரவீந்திரன் ஆண்டவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் வடக்கு பக்க சுவர் பொது பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது என்பது எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே தெரியும் என்றால் சரிதான், எங்களுக்குள் பிரச்சனை வந்தபோது ஆவணங்களை எடுத்து பார்த்தபோது தான் தெரியவந்தது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பற்றியோ, 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு பற்றியோ அல்லது 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தை ரத்து செய்வதற்கு பரிகாரமோ இந்த வழக்கில் நான் கோரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. நான் அனுப்பிய பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பில் 2ம் லக்க சொத்தாக ஆண்டவருக்கு ரவீந்திரன் எழுதிக்கொடுத்த சொத்தை தான் காண்பித்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பில் 2ம் லக்க சொத்தின் சொத்து விபரம் எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது

என்றால் சரிதான். வழக்குரையில் எத்தனை லக்க சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 4 லக்க சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது.

7. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் A schedule 1வது லக்க சொத்து கிழக்கு நான்குமாலாக யாருடைய சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் திருவெங்கடாசலம் செட்டியார் மனை காண்பிக்கப்பட்டுள்ளது. 1வது லக்க சொத்தின் கிழமேல் அளவு 43 ¾ அடி என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் தெற்கு நான்குமாலாக B Schedule பாக மனையும், இதன் 2வதுலக்க சொத்தும் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது லக்க சொத்தின் கிழக்கு நான்குமாலாக B Schedule பாக மனையிடமும், மனையும் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது லக்க சொத்தின் கிழமேல் அளவுகள் 6 அடி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. A Schedule 3வது லக்க சொத்தின் கிழக்கு நான்குமாலாக பிரிவு B Schedule பாக மனையிடம் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3வது லக்க சொத்தின் கிழமேல் அளவு தென்புறம் 3–5/8ன்படி வடபுறம் 6 அடியும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் லக்க சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள கிழமேல் தென்புறம் 3–5/8 அடியில் தான் எனது வீட்டிற்கான தலைவாசல் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தலைவாசலுக்கு தெற்கு புறம் சௌடம்மன் கோவில் தெரு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு தெற்கு நான்குமாலாக வழக்குரையில் சௌடம்மன் கோவில் தெரு தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தலைவாசலுக்கு கிழக்கு பக்கம் 5 அடி தள்ளிதான் 1ம் பிரதிவாதி ஆண்டவரின் மனை உள்ளது என்றால் சரிதான்.

9. A Schedule 2ம் லக்க சொத்துக்கும் 3ம் லக்க சொத்துக்கும் கிழக்கு பக்கம் B Schedule தேவசுப்பையா சொத்து என்றால் சரிதான். வழக்குரை சொத்தும் தேவசுப்பையாவிற்கு கிடைத்த B Schedule சொத்தும் சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான சொத்து என்றால் சரிதான். A Schedule மற்றும் B Schedule சொத்துக்களில் தெற்கு பக்கமுள்ள கிழமேல் சுவரானது 2 ½ அடி அகலமுள்ள செங்கல் சுண்ணாம்பு சாந்து போட்ட சுவர் என்றால் சரிதான். மேற்படி சுவரின் உயரம் எவ்வளவு என்றால் சுமார் 25 அடி இருக்கும். மேற்படி சுவற்றை ஒட்டி தெற்கு பக்கம் தான் 1ம் பிரதிவாதி ரவீந்திரனிடம் இருந்து கிரையம் வாங்கிய நிலம் என்றால் சரிதான். மேற்படி 100 ஆண்டுகள் பழமையான தெற்கு புற சுவர் தற்போதும் அதே போல் தான் உள்ளது என்றால் சரிதான், பிரதிவாதிகளும் தெற்குபுறமுள்ள சிமெண்ட்டை சுரண்டி அவர்களுடைய சுவற்றை எங்களுடைய சுவற்றுடன் சேர்த்துள்ளார்கள். நான் சொல்வதுபோல் எங்கள் வீட்டின் தெற்குபுற சுவற்றை

பிரதிவாதிகள் சுரண்டவில்லை என்றும், அவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் தான் சுவர் எழுப்பியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

10. பிரதிவாதிகள் அவர்களது வீட்டை இடித்து வீடு கட்டும்போது நான் சென்று பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். பிரதிவாதிகள் வீட்டை இடித்தபோது எங்கள் வீட்டின் தெற்குபுற சுவற்றின் வடக்கு முகமாக ஒரு சாமிமாடம் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் எங்கள் தெற்குபுற சுவற்றில் சாமி மாடம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு சாமிமாடம் எதுவும் இல்லை என்று நான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. எனது வீட்டின் A Schedule 3 வது லக்க சொத்தின் தலைவாசல் அமைந்துள்ள பகுதி பழமையாக எவ்வாறு இருந்ததோ அவ்வாறு தான் உள்ளது என்றால் சரிதான், நாங்கள் அந்த சுவற்றை இடித்து அதேபோல மீண்டும் கட்டினோம். நான் பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேனா அல்லது பட்டாவின் அடிப்படையில் உரிமை கோருகிறேனா என்றால் இரண்டின் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேன். தேவசுப்பையா சொத்திற்கும் சேர்த்து தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதை அடிப்படையாக கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, தேவசுப்பையாவின் சொத்தை எனது கணவர் கிரையம் வாங்கியுள்ளார். தேவசுப்பையாவிடமிருந்து எனது கணவர் வாங்கிய கிரைய பத்திரத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். தேவசுப்பையாவிடமிருந்து நாங்கள் கிரையம் வாங்கியதாக சொல்வது தவறு என்றும், அவ்வாறு நாங்கள் கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

12. வழக்குரையில் TSLR Sketch ன்படி நான் சொல்லியுள்ள சொத்து விபரம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. A Schedule 1 முதல் 3 லக்க சொத்துக்களின் அடிப்படையில் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தன் சர்வே எண்.1666/1 என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்.1663, 1664 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நில அளவையரை வைத்து அளந்து பார்த்தோமா என்றால் அளந்து பார்த்தோம். நில அளவை செய்தபோது எங்கள் வீட்டின் தெற்குபுற சுவர் எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது சுவர் என்று நில அளவையர் சொன்னார் என்றால் சரியல்ல. நில அளவை செய்ததற்கு நில அளவையர் அறிக்கை எதுவும் கொடுத்தாரா என்றால் அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை.

13. எங்கள் வீட்டின் தெற்குபுற சுவற்றை தாண்டி எங்களுக்கு எந்த அனுபவமும் இல்லை

என்றால் சரிதான். எனது சொத்திற்கு தெற்கு பக்கமுள்ள நிலத்தின் சர்வே எண்.1666/2 என்று நீதிமன்ற ஆணையரின் வரைபடத்திலும் சர்வேயர் வரைபடத்திலும் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு தெற்குபுறம் எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தவறான சொத்து விபரங்களை குறிப்பிட்டு எனக்கு உரிமை இல்லாத சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. நான் முழு விபரங்களை கூறாமல் சில விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரங்கள் காலம் கடந்தது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் எனது விருப்பத்திற்கேற்ப தவறுதலாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக பொய்யாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் எங்கள் வீட்டின் தெற்குபுற சுவர் 130 வருடம் பழமையான சுவர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரானது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் எழவேண்டும் என்று கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீது, குடிநீர் கட்டண ரசீதும் இந்த வழக்குரை சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீடு கட்டுவதை தடுப்பதற்காகவும் பிரதிவாதிகளை அழைக்களிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.09 17:00:37 +0530

District Munsif,
Bodinayakanur.